Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 9-1-1985 புதன்கிழமை (இரத்தாக்ஷி மார்கழி 25) முழக்கம் 168

## "ஸ்ரீமாவோவின் விருப்பத்திற்காக தேர்தல் நடக்காது!" : ஜனாதிபதி

"ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விரும்புகிறார் என்பதற்காக ஒரு பொதுத் தேர்தலை நடத்த முடியாது. 1989-ம் ஆண்டிலேயே பொதுத்தேர்தல் நடைபெறும்" என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் அறிவித்தார். பயங்கரவாதப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பொதுத்தேர்தல் உதவாது என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, அரசியல் அனுபவசாலியான ஸ்ரீமாவோவுக்கு இது புரியாதிருப்பது தமக்கு வியப்பாக விருப்பதாகவும் சொன்னார். சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் வாபஸ் பெறப்பட்டு விட்டதால் அதற்கான தேர்தலோ அல்லது சர்வஜன வாக்கெடுப்போ இனி நடத்த வேண்டிய தேவையில்லை —(2-ம் பக்கம் பார்க்க)

★ பாராளுமன்றத்தில் முன்னாள் அமைச்சர் சிறில் மத்தியு பேச்சு:

# அமைச்சர் பதவி நீக்கப்பட்டதை கௌரவமாக கருதுகிறேன்; யுத்தத்தின் மத்தியில் பேச்சா?

"நான் மந்திரிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை கௌரவமாகவே கருதுகிறேன். சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் பற்றி நான் தெரிவித்த கருத்துக்கள் அமைச்சரவை சம்பிரதாயத்துக்கு முரணானவை அல்ல. பயங்கரவாதத்தை உடனடியாக ஒழித்துக்கட்டாவிட்டால் ஜனநாயகம் அழிந்து பயங்கரவாதிகளின் கொடுங்கோல் மார்க்ஸிஸ ஆட்சி உருவாகிவிடும். யுத்தம் நடைபெறும் வேளை பேச்சுவார்த்தைகள் சாத்தியமில்லை. பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்ட பின்னரே பேச்சுவார்த்தை நடத்த முடியும்" என்று களனித் தொகுதி எம்.பியும் கைத்தொழில் அமைச்சர் பதவியிலிருந்து ஜனாதிபதியால் நீக்கப்பட்டவருமான திரு. சிறில் மத்தியு நேற்றுப் பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துப் பேசுகையில் கூறினார். தான் பதவி நீக்கப்பட்டது தொடர்பாக ஜனாதிபதிக்குத் தான் எழுதிய பதில் கடிதத்தையும் அவர் சபையில் சமர்ப்பித்தார். அதன் பின்னர் சிறில் மத்தியு தமதுரையில் முக்கியமாகக் குறிப்பிட்டதாவது:- 1971ல் ஏற்பட்ட கிளர்ச்சியை ஒழித்துக்கட்டியிராதிருந்தால் இன்று மார்க்ஸிஸ அரசு செயற்பட்டிருக்கும் ஜனநாயகம் அழிந்திருக்கும். சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் கட்சியினதோ, அரசினதோ அல்ல என்று அமைச்சரவையில் பிரதமர் கூறியிருந்தார் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்த யோசனைகளே அவை என்றும் அவரால் கூறப்பட்டது அவை பற்றி கருத்துக் —2ம் பக்கம் பார்க்க

# ஈழத்தமிழர் படுகொலை; பாரதம் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## ராஜீவை சந்திக்கப் போவதாகவும் அமிர் அறிவிப்பு; சிவா நாளை சென்னை பயணம்

(சென்னை)

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அப்பாவித் தமிழ் மக்களைப் பாதுகாப்புப் படையினர் படுகொலை செய்வது அதிகரித்து வருகின்றது. இவ் வன்செயலைத் தடுத்து நிறுத்துவதற்குத் திட்டவட்டமான ஆக்கபூர்வ முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், இந்திய அரசிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்

இலங்கையின் அண்மைக் காலச் சம்பவங்கள் தொடர்பாக விளக்கிக் கூறுவதற்காக பாரதப்பிரதமர் ராஜீவ் காந்தியை அடுத்த சில தினங்களில் தான் சந்திக்கவிருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், திரு இரா, சம்பந்தன் ஆகியோரும் இவருடன் புதுடில்லி செல்வர்.

இன்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் திரு. மு. சிவசிதம்பரம், நாளை விமான மூலம் கொழும்பிலிருந்து சென்னை சென்று அங்கிருந்து புதுடில்லி செல்வார் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று சென்னையில் பத்தி —2-ஆம் பக்கம் பார்க்

## குருநகர் சம்பவம்

குருநகர் முகாமின் நான்காம் மாடியிலிருந்து வீழ்ந்ததாகக் கூறப்படும் அச்சுவேலிப் —2-ஆம் பக்கம் பார்க்க

## திருமலை, மூதூர் பகுதியில் கிராம சேவகரும், நான்கு தமிழ் இளைஞர்களும் கைது!

(திருமலை)

திருமலை, மூதூர் ஆகிய பகுதிகளில் பாதுகாப்பு வேலைகள் இவ்வாரம் முதல் மேலும் பலப்படுத்தப்பட்டதுடன், சந்தேகத்துக்குரிய முறையில் நடமாடுபவர்கள் தடுத்து வைக்கப்பட்டு வருகின்றனர்.

நேற்று மட்டும் நான்கு தமிழ் இளைஞர்களும் கிராம சேவகர் ஒருவரும் பாதுகாப்புப் படையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் கைதாகினர்.

சாம்பல் தீவு, ஆத்திமோட்டை, மூதூர் இறங்குதுறை, கிளிவெட்டி ஆகிய பகுதிகளிலேயே இவர்கள் கைது செய் —2 ஆம் பக்கம் பார்க்க

## குடும்பஸ்தர் பலியானார்

(பலாலி)

குப்பிளான்-வீரமனைப் பகுதியில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் நடத்திய பாரிய அளவிலான தேடுதல் வேட்டையின் போது சுடுத்தர வயது குடும்பஸ்தர் ஒருவர் சுட்டு 2ம் பக்கம் பார்க்க

## முப்பதாயிரம் குடும்பங்கள் வடக்கில் இனவிகிதாசார அடிப்படையில் குடியேற்றம்

தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களிலுள்ள அரச காணிகளில் இன அடிப்படையில் விரைவில் குடியேற்றங்கள் நடத்தப்படவிருப்பதாக நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது —2-ஆம் பக்கம் பார்க்க

## ஆரியகுளம குண்டுவெடிப்புச் சம்பவம்: மாடிமனை தகர்ப்பு; அயல்வீடுகள் எரியுண்டன: பாதையில் பாரிய குழி

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் நிலத்திற்கு அடியில் வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் குண்டொன்றை ராணுவத்தினர் கண்டுபிடித்து வெடிக்க வைத்ததால் புதிதாகக் கட்டப்பட்ட அழகிய மாடி வீடொன்று தரைமட்டமானது அருகாமையிலிருந்த பல வீடுகள் எரியுண்டன. ஹைஏஸ் வானொன்று சுக்கு நூறானது வீதியில் பாரிய குழி ஏற்பட்டுள்ளது.

நேற்றுக்காலை பத்து மணியளவில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் இப்பகுதி மக்கள் மூட்டைமுடிச்சுகளுடன் வீட்டை விட்டு வெளியேறி வேறிடங்களுக்குச் சென்றனர் யாழ் நகரில் வர்த்தக —2-ஆம் பக்கம் பார்க்க

## கத்தோலிக்க குருகொலை தொடர்பாக மன்னாரில் உயர் அதிகாரி நேற்று ஸ்தல விசாரணை?

(மன்னார்)

வங்காலை கத்தோலிக்க மதகுரு வண. பிதா மேரி பஸ்தியன் படுகொலை சம்பந்தமான விசாரணைகள் மேற்கொள்ள உயர் அதிகாரியொருவர் நேற்று தள்ளாடி இராணுவ முகாமுக்கு விஜயம் செய்ததாகத் தெரியவந்துள்ளது

பாதுகாப்புப் படையுடன் சம்பந்தப்பட்ட உயர் அதிகா —2-ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக் கடற்படை சுட்டு தமிழக மீனவர் இருவர் பலி! பாரத அரசு பலத்த கண்டனம்

(புதுடில்லி)

தமிழக மீனவர்கள் இருவர் இந்தியக் கடல் எல்லைக்குள்ளிருக்கும் தனுஷ்கோடி என்ற இடத்தில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டித்த இந்திய அரசு, தனது ஆட்சேபனையையும் உத்தியோக பூர்வமாகத் தெரிவித்துள்ளது

இந்தியாவிலுள்ள இலங்கையின் பதில் தூதுவர் திரு. அல்பிரட் டேவிட் நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு அவரிடம் நேரடியாக ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இரு தமிழக மீனவரும் சுட்டுக் கொலை செய்யப்பட்டது பற்றி தமிழக மீன்வள அமைச்சர் திரு கலைமணி, பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் கவ 2ம் பக்கம் பார்க்க

## பட்டிருப்பு, திருகோணமலை இடைத்தேர்தல் விரைவில்

(கொழும்பு)

திருமலை, பட்டிருப்புத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் மகியங்கனை, முல்கிரிகலை தொகுதிகளுடன் சேர்த்து ஒரே தினத்தில் நடைபெறுமென்று ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று அறிவித்தார்.

வடபகுதியில் இப்போதிருக் —2-ஆம் பக்கம் பார்க்க

## மூன்று தபாலக கொள்ளைகள்

யாழ்ப்பாணத்தில் சுண்டுக்குளி தபாலகத்தில் நேற்று சுமார் இரண்டாயிரம் ரூபா பணமும், வண்ணார்பண்ணை தபாலகத்தில் சுமார் ஐயாயிரம் ரூபா பணமும் இளைஞர் —2-ஆம் பக்கம் பார்க்க

## மட்டுநகர் கொலை

(மட்டுநகர்)

மட்டுநகரில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த கூட்டுறவுச் சங்கக் கொள்ளையை முறியடித்ததாகக் கூறப்படும் — 2-ஆம் பக்கம் பார்க்க

# ஈழமுரசு

## சீனிக் கள்வருக்கு சரியான 'பூசை'! இளைஞருக்கு மக்கள் பாராட்டு

(கொடிகாமம்)

கூட்டுறவுச்சங்கக் கொள்ளையரைத் துப்புத்துலக்கிக் கைதுசெய்து, சரியான முறையில் அவர்களைப் பகிரங்கப்படுத்திய இளைஞர் கோஷ்டியை மக்கள் பாராட்டியுள்ளனர். தென்மராட்சி கிழக்கில் இச்சம்பவம் நடைபெறறது. இங்குள்ள நாவற்காடு சங்கக் கிளையில் சில தினங்களுக்கு முன்னர் பல மூடை சீனி களவாடப்பட்டது இதன் சூத்திரதாரிகளைக் கைதுசெய்த இளைஞர் கோஷ்டி ஒரு பகுதி சீனியையும் மீட்டுள்ளது. மிகுதிச் சீனியின் பெறுமதிப் பணத்தைத் தருவதற்குக் கொள்ளையர்கள் ஒப்புக்கொண்டனர். இவர்களுக்கு சரியான 'பூசை''யும் நடத்தப்பட்டதுடன் எச்சரிக்கையும் செய்யப்பட்டது

# இடம்பெயர்ந்த ஆசிரியர் இடமாற்ற பட்டியல் உடனடியாக வெளிவரும்!

இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான இடமாற்றப் பட்டியல் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துரித முயற்சியால் உடனடியாக வெளியிடப்பட இருப்பதாகப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் அறிவித்துள்ளார்.

1985 ஜனவரி முதல் இடமாற்றம் கிடைக்கும் எனக் கல்விச் சேவைக் குழுவில் இருந்து சுமார் இருநூற்றைம்பது ஆசிரியர்களுக்கு ஏற்கனவே கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. இம் மாதம் ஏழாம் திகதி பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஆரம்பிக்கும்போது தாம் புதிய பாடசாலைகளில் கடமையேற்கலாம் என ஆசிரியர்கள் எதிர்பார்த்து யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இதனிடையே யாழ்ப்பாண மாவட்டத்துக்கான இடமாற்றப் பட்டியல் கடந்த வாரம் கல்விச் சேவைக் குழுவினால் இரத்துச் செய்யப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு டி எஸ் கே வனசிங்க, பொதுச் செயலாளர் திரு. த மகாசிவம் ஆகிய இருவரும கல்விச் சேவைக் குழுச் செயலாளர் திரு. எம். எச். எச் ஆரியரத்தின, துணைச் செயலாளர் திரு. யு. அபேகுணசேகர, கல்விச்சேவைக் குழு உறுப்பினர் திரு. க. ஜெயக்குமார் ஆகியோரிடம் தனித்தனியே தொடர்பு கொண்டு நிலைமைகளை விளக்கியதைத் தொடர்ந்து இரத்துச் செய்யப்பட்ட இடமாற்றப் பட்டியலை உடனடியாக அமுல் டுத்துவதற்கு ஒப்புக் கொண்டுள்ளனர் என்றும் திரு மகாசிவம் தெரிவித்தார்.

இப்பட்டியல் கல்விச் சேவைக் குழுவினரால் யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளருக்கு உடனடியாக அனுப்பப் படுகிறதெனவும், ஆகவே, இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் அடுத்த வாரம் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் தமது இடமாற்றக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் திரு மகாசிவம் தெரிவித்தார்

## புறாக்லினிலிருந்து முதல்வர் இவ்வாரம் வெளியேறுவார்

(நியுயோர்க்)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் நியுயோர்க் புறாக்லின் மருத்துவமனையிலிருந்து இவ்வாரத்திலேயே வெளியேறிவிட முடியும் என்று மேற்படி மருத்துவமனை பிரதம டாக்டர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

எனினும் இது பற்றி டாக்டர்கள் ஆலோசித்து இறுதி முடிவெடுப்பார் என்று அவர் மேலும் தெரிவித்தார். ஓரளவுக்கு அவரால் நடக்கவும் பேசவும் முடிகிறதென்றும் அவர் கூறினார்.

மருத்துவ மனையிலிருந்து வெளியேறிய பின்னரும் முதல்வர் நியுயோர்க் ஹோட்டல் ஒன்றில் சிறிது காலம் தங்கி ஓய்வு எடுப்பார் என்றும் கூறப்பட்டது. அடுத்த மாத முதல் வாரம் இவர் தமிழகம் திரும்புவார்

### அடிகளார் நினைவாக கூட்டுப் பலி

வங்காலையில் சுடப்பட்டு மரணமான வண. பிதா மேரி பஸ்ரியன் அடிகளாருக்கு இறையருள் வேண்டி யாழ் ஆசனக் கோவிலில் நேற்றுக் காலை ஆயர் அதி வண தியோகுப்பிள்ளை தலைமையில் கூட்டுப் பலி நிறைவேற்றப்பட்டது. குருமார், கன்னியர்கள் உட்பட பெரும் திரளானோர் கலந்து கொண்டனர். பூசை ஆரம்பமாகு முன்னர் யாழ். நகரிலுள்ள பங்குகளில் இருந்து மக்கள் ஊர்வலமாக ஆசனக் கோவிலுக்கு சென்றனர்.

ஆயர் அங்கு மறைந்த வண பஸ்ரியன் அடிகளை பற்றி உரையாற்றுகையில் பலரும் கண்கலங்கினர். ஒரு பெண் மயங்கி விழுந்ததும் குறிப்பிடத்தக்கது.

### அடையாள வேலைநிறுத்தம்

யாழ் ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர் ராணுவத்தால் கைதானதை ஆட்சேபித்து ஆஸ்பத்திரி அரசாங்க சுகாதார சேவை தொழிலாளர் சங்கம் இன்று காலை அடையாள வேலை நிறுத்தம் நடத்தவிருப்பதாக அறிவித்துள்ளது.

### வடக்கில்...

—1-ம் பக்கத் தொடர்

இத்திட்டத்தின் கீழ் சுமார் முப்பதாயிரம் குடும்பங்கள வடகீழ் மாகாணங்களில் குடியேற்றப்படலாம் எனக் கூறப்படுகிறது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற மாவட்ட அமைச்சர்களின் முக்கியமான மாநாடொன்றில் இது தொடர்பாக திட்டவட்டமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

ஆரம்பத்தில் வடபகுதியின் எல்லைப்புறங்களான வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலுள்ள அரச காணிகளில் குடியேற்றங்கள் நடைபெறலாமெனத் தெரியவந்துள்ளது.

### கிராமசேவ..

—1-ம் பக்கத் தொடர்

யப்பட்டவர் சேருவில பூமரத்தடிச்சேனை கிராம சேவகர் சிவசுப்பிரமணியமும் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் ஒருவராவர்.

சாம்பல்தீவில் மூன்று இளைஞர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது தொடர்பாக உப்புவெளிப் பொலிஸார் ஆத்திமோட்டை கூட்டுறவுச் சங்க முகாமையாளர் ஒருவரை கைது செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

### ஸ்ரீமாவோ...

—1ஆம் பக்கத் தொடர்

என்றும், குறுகிய காலத்துள் எக்காரணம் கொண்டும் பொதுத் தேர்தல் நடைபெறுதென்றும் தெரிவித்தார்.

### தவறிவிட்டது

நா. வைத்திலிங்கம்
நெடுந்தீவு

அடையாள அட்டை நம். 51071003 பரந்தனில் தவறிவிட்டது கொண்டுவந்து தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி ஆ.வே ஆறுமுகம் அலசலை. பரந்தன்


### விற்பனைக்கு

சைக்கிள் பாவனை அனுமதிவிண்ணப்ப படிவங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏலவிற்பனை நிலையம்
சோப்பாய்


### மாடிமனை.

நிலையங்கள் அனைத்தும் திடுதிப்பென இழுத்து மூடப்பட்டன. போக்குவரத்து ஸ்தம்பித நிலையை அடைந்தது. ஆரியகுளம் சந்திக்கருகில் குண்டுவைக்கப்பட்டிருப்பதாக ராணுவத்துக்குக் கிடைத்த ரகசியத் தகவலை அடுத்து கவசவண்டிகள், பஸ்கள், டரக்குகளில் பலநூற்றுக் கணக்கான படைவீரர்கள் ஸ்தலத்துக்கு வந்து குண்டுகளை மீட்டு வெடிக்க வைத்தனராம். நடராசா என்பவரது மாடி வீடே தரைமட்டமாக்கப்பட்டது.

வீதியில் குண்டு வெடித்த இடத்தில் பதினைந்தடி அகலமும், எட்டடி ஆழமுமான பாரிய குழியொன்று ஏற்பட்டுள்ளது இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ் நகருக்குக் குடிநீர் செல்லும் 'பைப்' வெடித்து, அதிலிருந்து குடிநீர் வெளியேறிக்கொண்டிருந்தது. இதனால் நகருக்கான குடிநீர் விநியோகம் பாதிக்கப்படலாமென அஞ்சப்படுகிறது

நேற்றைய இச்சம்பவத்தினால் உயிர்ச்சேதமோ, எவருக்கும் காயமோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

### குருநகர்...

—1ம் பக்கத் தொடர்ச்சி

பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில மயக்கம் தெளியாத நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### மன்னாரில்...

—1-ஆம் பக்கத் தொடர்

ரிகளை அவர் சந்தித்து, ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டதாகவும், வங்காலைச் சம்பவம் சம்பந்தமான பல விபரங்களை அவர் சேகரித்ததாகவும் நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னார். யாழ்ப்பாணம் மேற்றிராணிமார்களும் மற்றும் பல பொது அமைப்புக்களும் வங்காலை வண. பிதா கொலை தொடர்பாக அரச உயர் மட்டத்துக்கு அனுப்பிய தந்திகள் தொடர்பாகவே இவ் அதிகாரி மன்னாருக்கு அனுப்பப்பட்டாராம்.

இதற்கிடையே இக்கொலை தொடர்பாக பொலிஸ் விசாரணைக்கு இலங்கை அரசு உத்தரவிட்டிருப்பதாக இந்திய வானொலி நேற்று தனது செய்தியறிக்கையில் தெரிவித்தது

### பட்டிருப்..

—1-ஆம் பக்கத் தொடர்

கும் சூழ்நிலையில். அங்கு இடைத்தேர்தல்களை நடத்த முடியாதென்று தெரிவித்த ஜனாதிபதி கிழக்கு மாகாணத்தில் காலியாகவுள்ள திருமலை. பட்டிருப்பு தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்கள் நடைபெறுமென்று அறிவித்தார்

இவ்விரு தொகுதிகளுக்கும் நியமனப்பத்திரம் தாக்கல் செய்ய திகதி குறிப்பிட்டு ஏற்கனவே வர்த்தமானிமூலம் விளம்பரம் செய்யப்பட்ட போதிலும், தமிழர் கூட்டணியின் ஆட்சேபனையைத் தொடர்ந்து பின்போடப்பட்டது

### ஈழத்தமிழர்..

—1ம் பக்கத் தொடர்

ரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றிய திரு அமிர்தலிங்கம் மன்னார். வவுனியா, முல்லைத்தீவு, திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இராணுவத்தினரும், ஆயுதம் தாங்கிய சிங்கள தீவிரவாதிகளும் அப்பாவித்தமிழ் மக்களைக் கண்மூடித்தனமாகக் கொலை செய்கிறார்கள் என்றும் சொன்னதுடன். வங்காலையில் மதகுருவானவர் சுடப்பட்டதை அனைத்து மதத்தவர்களும் கண்டிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்

### இலங்கைக் கடற்....

—1ம் பக்கத் தொடர்

னத்துக்குக் கொண்டுவந்திருந்தார்.

சுட்டுக் கொலை செய்யப்பட்டவர்களில் ஒருவரது சடலம் மட்டுமே இதுவரை மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தைக் கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம் நடத்திய இராமேஸ்வரம் மீனவர்கள் பாம்பன் பால ரயில் பாதை தண்டவாளங்களைக் கழற்றி. ரயில் சேவையைச் சீர்குலைத்தனர். இப்பகுதியெங்கும் பதற்றம் நிலவியது

மரணமானவர்கள் குடும்பத்துக்கு தமிழக அரசு தலா இரண்டாயிரம் ரூபா வழங்கியுள்ளது

### அமைச்சர்.....

—1ம் பக்கத் தொடர்ச்சி

தெரிவிக்க கட்சிப் பிரதிநிதிகள் அனுமதிக்கப்பட்டனர். சிங்கள மக்களின் உரிமைகளை இந் நாட்டில் பேணிக்காக்க வேண்டும் என்பதற்காகவே சிங்களவர்கள் தம்மை ஆட்சி பீடத்தில் ஏற்றினர் என்பதை எம்.பிக்கள் உணர வேண்டும்.

சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் தொடர்பாக நான் வெளியிட்ட கருத்துக்கள் அமைச்சரவைக்கு முரணானவை என எவரும் கருதமுடியாது

வடபகுதிப் பயங்கரவாதிகளை முற்றாக ஒழித்துக்கட்டாவிட்டால் தீவிரவாதிகளின் கொடுங்கோல் மார்க்ஸிஸ அரசு தோன்றும். 1971இல் நாம் கிளர்ச்சிக்காரர்களை ஒழித்திராவிட்டால் இன்று கொடுங்கோல் மார்க்ஸிஸ்ட் ஆட்சி ஒன்று நிச்சயமாகப் பதவியிலிருந்திருக்கும் வடபகுதிப் பயங்கரவாதிகளுக்கு எதிரானது மட்டுமல்ல எமது போராட்டம். சர்வதேச மார்க்ஸிஸ்ட் பயங்கரவாதத்துக்கும் எதிரானதே. இத்தகைய ஒரு ஆட்சியினரிடமா எமது எதிர்காலச் சந்ததியை நாம் ஒப்படைப்பது? மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைக்கு சர்வதேச மார்க்ஸிஸ்ட் சக்திகளின் உதவியுண்டு. எனவே இத்தகைய சக்திகளுக்கு இடமளிக்காது நாம் பாடுபட வேண்டும்'' இவ்வாறு திரு. சிறில் மத்தியு சொன்னார்.

### குடும்பஸ்தர்.....

1ம் பக்கத் தொடர்

கொல்லப்பட்டார் இவர் ஆசிரியர் ஒருவரின் தனயன் எனத் தெரியவருகிறது.

இராணுவத்தினர் இப்பகுதியில் அடுத்தடுத்துத் தேடுதல் வேட்டைகளை சமீப காலத்தில் நடத்தி வருகின்றனர். திங்கட்கிழமை தேடுதலின் போது பல இளைஞர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

### மூன்று தபாலக....

—1-ஆம் பக்கத் தொடர்

களினால் கொள்ளையடிக்கப்பட்டன யாழ்ப்பாணம் தபாலக வான் அராலி நோக்கிச் செல்கையில் வழிமறிக்கப்பட்டு அதில் தபால் பையுக்குள்ளிருந்த மூவாயிரம் ரூபா பெறுமதியான முத்திரையும் பணமும் கொள்ளையிடப்பட்டன.

### மட்டுநகர்......

—1-ஆம் பக்கத் தொடர்

காவலாளி அருள்நேசநாதன் நேற்றுக்காலை அவரது வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.


### யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டுள்ளது)

**ஏல விற்பனை (அலுமினியப் பாத்திரங்கள்)**

இடம்: யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
சாய்ப்புக் களஞ்சியம்
ஆஸ்பத்திரி வீதி (கொட்டடிச்சந்திக்கு அருகாமை)

காலம்: 11-01-85

நேரம்: காலை 10-00 மணி

பொருட்கள்: புதியபானை வகைகள், இதர அலுமினியப் பாத்திரங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.

127, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்
8-1-85

பதில் பொது முகாமையாளர்


'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில்